**சிலாபம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் சிலாபம் நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 11,387,107 குறைவாக நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை 2020.12.31 திகதிற்கு நாளாதுவரையாக்க நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதாக தயவாய் அறிவிக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் மோடர் வண்டி மற்றும் மாட்டு வண்டி ரூபா 6,519,296 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை 2020.12.31 திகதிற்கு நாளாதுவரையாக்க நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதாக தயவாய் அறிவிக்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டில் தளபாடங்கள் மற்றும் பொறுத்திகள் ரூபா 3,408,135 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை 2020.12.31 திகதிற்கு நாளாதுவரையாக்க நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதாக தயவாய் அறிவிக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 14 கணக்கு விடயங்களிற்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை/ துணைப்பதிவேடுகள் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகளிற்கிடையிலான இணக்கமின்மை கூட்டுத் தொகை ரூபா 45,009,474 ஆனது. | பதிவேடுகளை சரி செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவேடு பரிசோதனையின் போது பல ஆண்டுகளாக நிலவி வரும் மீதிகளாகையால் 2020 கணக்குகள் தயாரிக்கும் போது அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் ரூபா 8,871,877 ஆன முற்கொடுப்பனவு மீதிகளின் பெறுமதி மற்றும் ரூபா 73,940 ஆன சபையினால் செய்யப்பட்ட வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய கணக்கு மீதிகளை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020.12.31 திகதியன்று இறுதிக் கணக்குகளிற்கு தேவையான தகவல்களை சான்றுகளுடன் கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 39,962,029 ஆனதுடன் அதில் முன்னைய ஆண்டுகளிற்குரிய ரூபா 31,086,616 ஆன கடன் கொடுனர் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020.12.31 திகதியன்று இறுதிக் கணக்குகளிற்கு தேவையான தகவல்களை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கிறேன். |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாததனால் ரூபா 281,209,417 ஆன 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | இறுதிக் கணக்குகளுடன் அட்டவனைகள் சமர்பிக்கப்பட வேண்டும். | இம் மீதிகளிற்கான அட்டவனைகளை சமர்பிப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டம் | | | |
| 170 பிரிவு | ஓராண்டை விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 60,186,065 ஆன வீதவரி மற்றும் நிலுவை குத்தகை வாடகை தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு அமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அசையும் சொத்துக்களை தடை செய்து ரூபா 4,829,589 தொகையும் நடமாடும் சேவை நடாத்தி ரூபா 729,280 தொகையும் முன்னைய நிலுவையிலிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன் நிலுவை கடையறை வாடகைக்காக புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் செலுத்தாத குத்தகைக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| 571 பிரிவு | வைப்பு மீதியில் உள்ளடங்கியிருந்த ரூபா 2,963,943 ஆன காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020.12.31 திகதியன்று இறுதிக் கணக்குகளிற்கு தேவையான தகவல்களை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1975 உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய கட்டளை மற்றும் 1978 ஜூன் 07 ஆம் திகதிய 320/8 ஆம் இலக்க அரச அதிவிசேட வர்த்தமாணியினால் பிரசுரிக்கப்பட்ட திருத்தம்<br>----------------------------- | | | |
| | உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய கட்டளை 36 ஆம் பிரிவு | மாதாந்தம் சபையினால் செலுத்த வேண்டிய ரூபா 9,021,520 ஆன ஓய்பூதிய பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய பங்களிப்பை துரிதமாக செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய பிரதேச செயலகங்களிற்கு சமர்பித்து தொடர்புடைய தகவல்ளை (ஓய்வூதிய தகவல்கள்) கோரி அனுப்பப்பட்டுள்ளதுடன், 2020 பெப்ரவரி 06 திகதியன்று பட்டியலில் குறிப்பிடப்படும் 71 நபர்களில் 23 நபர்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காததால் உரிய பிரதேச செயலகங்களினூடாக எழுத்து மூல உருதிப்படுத்தலை பெற்று முன் நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்ககிறேன் |

**2. நிதி மீளாய்வு**

--------------------

**2.1 நிதி விளைவுகள்**

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 20,953,270 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 16,885,243 ஆனது.

## 2.2 நிதி கட்டுப்பாடு

### 2.2.1 செயலற்ற வங்கிக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மக்கள் வங்கியில் பேணப்பட்டு வந்த தற்போது செயலற்ற 02 நடைமுறை கணக்குகளில் முறையே ரூபா 24,686 மற்றும் ரூபா 1,242 ஆன மீதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | குறித்த கணக்கு மீதிகள் தொடர்பான தகவல்களை சமர்பிக்க வேண்டும். | 2020.12.31 திகதியன்று இறுதிக் கணக்குகளிற்கு தேவையான தகவல்களை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கிறேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 23,116 | 23,018 | 19,348 | 40,868 | 22,384 | 22,966 | 22,770 | 37,198 |
| (ii) | வாடகை | 57,756 | 41,295 | 38,729 | 37,282 | 16,467 | 16,534 | 12,369 | 34,716 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,121 | 1,866 | 1,875 | --- | 1,000 | 1,244 | 1,235 | 9 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,651 | 12,012 | 13,702 | 68,984 | 47,031 | 40,225 | 28,655 | 70,674 |
| | கூட்டுத் தொகை | 99,644 | 78,191 | 73,654 | 147,134 | 86,882 | 80,969 | 65,029 | 142,597 |

*சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டில் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடங்கப்பட்டுள்ளது.

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மொத்த பில் இடப்பட்ட வருமானம் ரூபா 78,191,551 ஆனதுடன், மீளாய்வாண்டினுள் பில் | நிலுவை மீதிகளை துரிதமாக அறவிட நடவடிக்கை | சிலாபம் வெல்ல பிரதேசத்திலிருந்து அறவிட வேண்டிய வீத வரி வருமானம் அறவிடப்படாமை, பில் இடப்பட்ட |

| | | |
|---|---|---|
| இடப்பட்ட வருமானத்திலிருந்து மற்றும் 2019 ஜனவரி 01 திகதி மொத்த நிலுவையிலிருந்து ரூபா 73,653,992 சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டினுள் மொத்த வருமானம் செகரித்தலின் முன்னேற்றம் 33 சதவீதம் அளவானது. | எடுக்க வேண்டும். | ரூபா 10,000,000 ஆன முத்திரை கட்டணத்தில் ஆண்டிற்குரியதாக எத்தொகையும் அறவிடப்படாமை மற்றும் பில் இடப்பட்ட கடையறை வாடகை வருமானம் ரூபா 18,648,350 தொகையிலிருந்து ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட தொகை ரூபா 12,194,582 ஆகும். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டின் பின்னர் கடையறை வாடகை திருத்தமொன்றை மேற்கொள்ள சபையிற்கு இயலாதிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடையறை வாடகை ரூபா 37,282,256 ஆனது. | நிலுவை கடையறை வாடகையை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப உடன்படிக்கையில் கடைகளை வழங்கிய திகதியிலிருந்து 20 ஆண்டு காலத்திற்கு நில வாடகையொன்றும், அவ் 20 ஆண்டுகளின் பின்பு நில வாடகை மற்றும் கடையறை வாடகை இரண்டையும் அறவிட பரிந்துரைத்து அதனை செயற்படுத்துமாறு வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மதிப்பீடு செய்து புதிய மதிப்பீடு வழங்கப்பட்ட பின்னர் நிலுவை கடையறை வாடகை அறவிட நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டில் மாகான சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 3 உப விதிகளுக்காக விடயப்பொறுப்பு அமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 இல் அத் உப விதிகளை மகா சபையிற்கு முன்வைத்து அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | தற்போது அத் உப விதிகளை மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் உள்ளூராட்சி அமைப்புடன் இணைந்து, உப விதிகளை 2020 ஆண்டில் தயாரித்து அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டில் செயல்நடவடிக்கை திட்டம் பிரகாரம் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 8,285,000 ஆன 11 நியழச்சித்திட்டகளை ஆண்டினுள் மேற்கொண்டிருக்கவில்லை. | திட்டத்திற்கமைய குறித்த கருத்திட்டங்கள் துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | உயிர்த்த ஞாயர் தின தாக்குதல் காரணமாக நாட்டு நிலைமையின் மீது அவ்வாண்டு வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியாமை, அதிக வரட்சி நிலவியமை காரணமாக வேலைத் திட்டங்களை நடத்தாமை மற்றும் சமூக சபைகள் மூலம் உரிய செலவுகள் மேற்கொள்ளப்படுவதால் கருத்திட்டங்களிற்காக கிடைத்த ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன. |

(இ) **திண்மக் கழிவுப் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை எல்லையில் ஒன்று சேறும் 18 டொன் அளவான மொத்த கழிவுகள் திறந்த இடங்களில் இடப்பட்டிருந்ததுடன் கொம்போஸ்ட் கொட்டில் ஒன்று இல்லாததால் கொம்போஸ்ட் செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உக்கலடையா கழிவுகளின் முகாமை தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். | கொம்போஸ்ட் கொட்டில் ஒன்றை நிர்மாணிக்க உத்தேசித்த 02 காணிகளில் சுற்றாடல் சாத்தியப்பாடு, மதிப்பீட்டு அறிக்கையின் சாத்தியப்பாடு மற்றும் இணக்கப்பாட்டை கவனத்தித்து |

| | | |
|---|---|---|
| | | பொருத்தமான காணியொன்றை கொள்வனவு செய்து கொம்போஸ்ட் கொட்டிலொன்றை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகிறது. |

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 22 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்கான இலக்குகளை இனங்கண்டு அந் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ள பல செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த திட்டமிட்டிருந்த போதும் மீளாய்வாண்டினுள் 21 நோக்கங்களை மாத்திரம் மேற்கொண்டிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையினால் குழந்தை துஷ்பிரயோகம் மற்றும் குழந்தை வதையை ஒழிக்கும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அதன் பௌதீக முன்னேற்றம் மாத்திரம் காட்டப்படுகிறது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 மற்றும் 2004 ஆண்டுகளில் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய அரையாண்டு அறிக்கை தாமதித்து அனுப்பப்பட்டதால் ரூபா 103,842 மிகை அறவீடு செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகையை பொறுப்பான அலுவலரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | மிகை அறவீட்டுத் தொகையை உரிய அலுவலரிடமிருந்து துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2013 முதல் அரையாண்டு அறிக்கைக்குரிய மிகை அறவீட்டுத் தொகை ரூபா 994 இனை செலுத்துமாறு பொறுப்பான அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2003, 2004 ஆண்டுகளில் இக் கடமையை மேற்கொண்ட அலுவலர்களை இனங்காண விசாரணை ஒன்றை மேற்கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ரூபா 2,951,449 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 21 வளிப்பதனாக்கிகளை, இயக்க காணப்படும் மின்கொள்ளளவு போதாமை காரணமாக பொருத்தாது பொறுப்புக் காலம் முடிவடைந்திருந்தது. | துரிதமாக மின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | வளிப்பதனாக்கிகளை இயக்க மின்சாரத்தை பெற்றுக் கொள்ள மின்மாற்றி இயந்திரம் தேவையாகும். சில வளிப்பதனாக்கிகள் பயன்படுத்தப்படுவதுடன் தற்போது மின்மாற்றியை நிலை நிறுத்த மின்சார சபையிலிருந்து மதிப்பீடு பெறப்பட்டுள்ளதுடன் 2020 பாதிட்டின் மூலம் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்தும் போது 2018 வருட இறுதியில் ரூபா 1,002,778 தொகை மேலதிகமாக செலுத்தியிருந்ததுடன் அத் தொகையை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலதிகமாக செலுத்தியுள்ள தொகையை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அறிக்கையை திருத்தி 2019-09-05 திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாண்டின் 02 காலாண்டுகளிற்கான ரூபா 639,982 தொகையை பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களை பூர்த்தி செய்து 2019-11-13 திகதி மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சகையின் செயலாளர் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாக காணப்படுவதுடன், அப் பதவிக்காக இரண்டாம் தர அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் மொத்த ஆளணி எண்ணிக்கையினுள் இரண்டாம் தர பிரிவில் தீயணைப்பு அலகில் 36 வெற்றிடங்கள் நிலவின. | குறித்த வெற்றிடங்களை முறையாக துரிதமாக பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சகையின் செயலாளர் பதவியானது இலங்கை நிர்வாக சேவையின் தரம் iii/ii தரத்திலான பதவி ஒன்றாவதுடன் அப்பதவி பல வருடங்களாக வெறிறிடமாக நிலவுகிறது. அப்பதவி பதில் கடமைபுரியும் செயலாளரின் கீழ் நடாத்திச் செல்வதுடன் தற்போது இரண்டாம் தர அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் செயலாளர் பதவியில் கடமை புரிய நியமிக்கப்பட்டுள்ளதாக தயவாய் அறிவிக்கிறேன். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக விநியோகிக்கப்படாது நிலவும் ரூபா 43,488 பெறுமதியான 08 மின் உருப்படிகள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவ் உருப்படிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்கள் தேவையிற்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன், துரிதமாக உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நவீன தொழில்நுட்பத்தின் வருகை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் கீழ் வலுசக்தி பிரச்சினைக்கு தீர்வாக LED குமிழ்களின் பயன்பாட்டிற்கு பிரவேசித்தலின் காரணமாக இம் மின் உபகரணங்களின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் 84 பாதீட்டு விடயங்களுக்காக ஏற்படுத்தியிருந்த ரூபா 3,462,000 ஆன மொத்த ஒதுக்கீட்டுத் தொகையும் முழுமையாக எஞ்சியிருந்தது. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி நகர சபை பாதீடு கருத்திட்ட பாதீடாக தயாரிக்கப்படுகிறது. அதன் காரணமாக கருத்திட்டங்களிற்கு உரிய செலவின தலைப்பிற்காக வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வு திட்டமொன்றை தயாரிக்க கவனம் செலுத்தப்பட்டு இருக்காததால் கட்டிடங்கள் உள்ளிட்டு சொத்துக்களின் முகாமை, வருமானம் ஈட்டல் மற்றும் பொது மக்கள் சேவைகளை மேற்கொள்ளல் போன்ற முக்கிய துறைகள் உள்ளக கணக்காய்விலிருந்து விடுபட்டிருந்தன. | சபையின் அனைத்து செயற்பாடுகளும் உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆண்டு உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் உள்ளக கணக்காயவிற்கு உட்படாத துறைகளை 2020 ஆண்டு முடியுமான அளவு கணக்காய்வு செய்யவும் உள்ளக கணக்காய்வு குழுவை பலப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தயவாய் அறிவிக்கிறேன். |